# நமது தின கனி

காலை நாளிதழ்

# NAMADHU DHINA KANI

Daily Morning

| Vol: 01 | Issue: 276 | 4 Pages | 9.5.2024 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 01 | இதழ்: 276 | 4 பக்கங்கள் | 9.5.2024 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## ரொட்டிக்கடை நடத்தும் 10 வயது சிறுவன்



டெல்லி, மே.9

டெல்லியின் கிழக்கு விஹார் போலீஸ் நிலையம் அருகே சாலையோரத்தில் ரொட்டிக்கடை நடத்தும் 10 வயது சிறுவன் தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிது.

சரப்ஜித் சிங் என்ற உணவு பதிவர் ஒருவர் அந்த கடைக்கு சென்றுள்ளார். கடையில் இருந்த 10 வயது சிறுவன் ஜஸ்பிரீத்திடம் உனது தந்தை எங்கே என்று கேட்க... அதற்கு ஜஸ்பிரீத் எனது தந்தை சமீபத்தில் உடல் நலப்பாதிப்பால் உயிரிழந்து விட்டார். அதன் பிறகு எனது தாயார் என்னையும், எனது சகோதரியையும் தவிக்க விட்டு விட்டு சென்று விட்டார். இதனால் நானும், எனது சகோதரியும் மிகவும் அதிர்ச்சியடைந்தோம். பின்னர் வாழ்வாதாரம் கருதி எனது தந்தையின் கடையை நானே நடத்த தொடங்கி விட்டேன். என் தந்தையிடம் இருந்து எக்ரோல் மற்றும் சிக்கன் ரொட்டி வகைகளை செய்ய பழகி இருந்தேன். தற்போது பல்வேறு வகையான ரொட்டி வகைகளை விற்பனை செய்கிறேன். வருபவர்கள் எல்லோருமே நல்ல வரவேற்பு கொடுக்கின்றனர் என கூறுகிறார்.

அவரதுஇந்தவீடியோஇணையத்தில்வைரலாகி96லட்சம்விருப்பங்களை குவித்தது. வீடியோவை பார்த்த பிரபல தொழில் அதிபர் ஆனந்த் மஹிந்திரா சிறுவனுக்கு உதவ முன் வந்தார். இது தொடர்பாக அவர் தனது வலைதள பக்கத்தில் வெளியிட்ட பதிவில், தைரியம், உன் பெயர் ஜஸ்பிரீத். ஆனால் அவரது கல்வி பாதிக்கப்படகூடாது. யாரேனும் அவரது தொடர்பு எண்ணில் இருந்தால் பகிரவும். ஜஸ்பிரீத்தின் கல்விக்கு ஆதரவு அளிப்பதற்கான வாய்ப்புகளை எனது அறக்கட்டளை செய்யும் என கூறியுள்ளார்.

## வங்காளதேசத்தில் கடும் வெப்ப அலையால் 15 பேர் பலி



வங்காளதேசம், மே.9

இந்தியாவின் அண்டை நாடான வங்காளதேசத்திலும் கடுமையான வெயில் கொளுத்தி வருகிறது. இதன் காரணமாக வெப்பம் அலை வீசுவதால், மக்கள் வெளியில் நடமாட நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக காலை 10 மணி முதல் மாலை 4 மணி கடுமையான வெப்ப அலை வீசுகிறது. கடந்து இரண்டு வாரங்களில் வெப்பம் தாங்க முடியாமல் 15 பேர் உயிரிழந்ததாக அந்நாட்டின் சுகாதார மையம் தெரிவித்துள்ளது.

காலை 11 மணி நிலவரப்படி கடந்த 24 மணி நேரத்தில் 3 பேர் உயிரிழந்துள்ளனர். வங்காளதேச நாட்டின் தென்மேற்கு பகுதியில் உள்ள மகுரா மாவட்டத்தில்தான் உயிரிழந்தோரின் எண்ணிக்கை அதிகமாக பதிவாகியுள்ளது. இந்த மாவட்டத்தில் வெப்பநிலை 43.9 டிகிரி செல்சியஸ் பதிவாகியுள்ளது.

கடந்த சில வருடங்களாக இல்லாத வகையில் வங்காளதேசத்தின் பெரும்பாலான இடத்தில் வெப்ப அலை வீசி வருகிறது. வெப்ப அலை காரணமாக பள்ளிகள், கல்லூரிகள், மதராஸ், தொழிநுட்ப கல்வி நிறுவனங்கள் என அனைத்திற்குள் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளன.

சீரற்றமழைமற்றும்அதிகவெப்பநிலைகாரணமாகவரும்ஆண்டுகளிலும் வங்காளதேசத்தில் அதிக வெப்ப அலை வீசும் என நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

## ரஷியா மீது உக்ரைன் நடத்திய டிரோன் தாக்குதலில் 6 பேர் பலி: 35 பேர் காயம்



ரஷ்யா, மே.9

ரஷியா உக்ரைன் இடையிலான போர் இரண்டு வருடங்களுக்கு மேலாக நடைபெற்று வருகிறது. தற்போது இரு நாடுகளும் ஏவுகணை, டிரோன்கள் மூலம் தாக்குதல் நடத்தி வருகின்றன. இதனால் பொதுமக்கள் வசிக்கும் குடியிருப்புகள், வாகனங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டு அப்பாவி மக்கள் கொல்லப்படுகின்றன.

காலை உக்ரைன் ரஷியாவுடனான எல்லையில் உள்ள பெல்கோரோட் மகாணத்தில் உள்ள பகுதி மீது டிரோன் தாக்குதல் நடத்தியுள்ளது என அந்த மாகாண கவர்னர் கிளாட்கோவ் தெரிவித்துள்ளார்.

பெல்கோரோட் மாகாணத்தில் உள்ள பொரிசோவ்ஸ்கி மாவட்டம் பெரேசோவ்கா கிராமம் அருகே ஒரு நிறுவனத்தின் தொழிலாளர்கள் இரு வாகனங்கள் சென்று கொண்டிருந்தனர். அந்த வாகனங்கள் அருகே கார் ஒன்றும் சென்று கொண்டிருந்தது. அதன்மீது உக்ரைனின் டிரோன்கள் தாக்கியது.

இந்த தாக்குதலில் 6 பேர் உயிரிழந்துள்ளனர். இரண்டு குழந்தைகள் லேசான காயத்துடன் உயிர் தப்பின. ஒருவர் படுகாயத்துடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார் என கிளாட்கோவ் தெரிவித்துள்ளார்.

# திமுக ஆட்சி பொறுப்பேற்று 3 ஆண்டுகள் நிறைவு அண்ணா, கருணாநிதி நினைவிடங்களில் மு.க.ஸ்டாலின் மரியாதை



சென்னை, மே. 9

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. ஆட்சி கடந்த 2021ம் ஆண்டு மே மாதம் 7ந்தேதி பதவி ஏற்றது. தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்று 3 ஆண்டுகள் நிறைவு பெற்று இன்று 4ம் ஆண்டு தொடங்குவதையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

இது சொல்லாட்சி அல்ல, செயலாட்சி. மக்களின் நன்றி கலந்த வாழ்த்தும், புன்னகை அரும்பும் முகங்களும்தான் இன்னும் இன்னும் உழைக்கத் தூண்டுகிறது. நம்பிக்கையோடு முன் செல்கிறேன். பெருமையோடு சொல்கிறேன். தலை சிறந்த மூன்றாண்டு தலைநிமிர்ந்த தமிழ்நாடு என்று கூறினார்.

இந்நிலையில், திமுக ஆட்சி பெறுப்பேற்று 3 ஆண்டுகள் நிறைவடைந்ததை அடுத்து, சென்னை மெரினாவில் உள்ள அண்ணா மற்றும் கருணாநிதி நினைவிடத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மரியாதை செலுத்தினார்.

அவருடன் தி.மு.க. பொதுச்செயலாளரும் அமைச்சருமான துரைமுருகன், தி.மு.க. பொருளாளர் டி. ஆர்.பாலு, அமைச்சர்கள் பொன்முடி, சேகர்பாபு, எ.வ.வேலு ஆகியோர் மரியாதை செலுத்தினர்.

# தாராபுரம் அருகே லோடு ஆட்டோ கவிழ்ந்து பெண் பலி



மூலனூர், மே.9

திண்டுக்கல் மாவட்டம் ராமநாயக்கன்பட்டியை சேர்ந்தவர் சுப்பிரமணியம் ( வயது 56). இவர் தனது உறவினர்கள் 20 பேருடன் இன்று காலை லோடு ஆட்டோவில் திருப்பூர் மாவட்டம் மூலனூர் அருகே பட்டுத்துறை என்ற இடத்தில் உள்ள மலையாள கருப்பண்ண சாமி கோவிலில் வழிபடுவதற்காக சென்றார்.

தாராபுரம் அருகே மூலனூர் அடுத்த துலுக்க வலசு அருகே செல்லும் போது திடீரென டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த வாகனம் தாறுமாறாக ஓடி சாலையோரத்தில் கவிழ்ந்தது.

இதில் வாகனத்தின் பின்புறத்தில் இருந்தவர்கள் தூக்கி வீசப்பட்டு பலத்த காயமடைந்தனர். சிலர் வாகனத்தின் அடியில் சிக்கினர். அவர்களது அலறல் சத்தம் கேட்டு அக்கம்பக்கத்தினர் ஓடி வந்து இடிபாடுகளில் சிக்கிய வர்களை மீட்டனர். இந்த விபத்தில் 20 பேர் படுகாயம் அடைந்தனர். அவர்களை ஆம்புலன்ஸ் உதவியுடன் தாராபுரம் மற்றும் வெள்ள கோவில் அரசு ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர்.

ஆனால் ஆஸ்பத்திரிக்கு செல்லும் வழியில் பழனிசாமி என்பவரின் மனைவி பொட்டியம்மாள் (55) இறந்தார். சத்யா (14), மணிமேகலை (35,) நாகரத்தினம் (36), மாரியம்மாள் (36), செல்வபிரியா(13), ஈஸ்வரி (39), மற்றொரு ஈஸ்வரி (30), லட்சுமி (47), சுப்பிரமணி (60), பழனியம்மாள் ( 70) உள்பட 19 பேர் காயம் அடைந்தனர்.12 பேர் தாராபுரம் அரசு மருத்துவமனையிலும்,7 பேர் வெள்ளக் கோவில் அரசு மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

இந்த விபத்து குறித்து மூலனூர் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள். சரக்கு வாகனத்தில் ஆட்களை ஏற்றிச்செல்லக்கூடாது என போலீசார் தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர். இருப்பினும் சிலர் சரக்கு வாகனத்தில் பொதுமக்களை அழைத்து செல்கின்றனர். எனவே இதனை தடுக்க போலீசார் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# உலக ரெட் கிராஸ் தினத்தில் விழுப்புரம் ஜீனிபர் ரெட் கிராஸ் ஆசிரியர்களுக்கு நெடுங்கால சேவை விருது: சி.சி.ஒ. ரெ.அறிவழகன் வழங்கி வாழ்த்து



விழுப்புரம், மே. 9

08.05.2024 உலக ரெட் கிராஸ் தினத்தை முன்னிட்டு நடந்த விழாவில், விழுப்புரம் கல்வி மாவட்ட ஜுனியர் ரெட் கிராஸ் அமைப்பை பள்ளிகளில் சிறப்புடன் நடத்தி வரும் ஆசிரியர்களுக்கு நெடுங்கால சேவை விருது(LONG SERVICE AWARD) வழங்கப்பட்டது.

மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் ரெ.அறிவழகன் வழங்கி வாழ்த்தினார். மாவட்டக் கல்வி அலுவலர் த.சு.மகாலட்சுமி வாழ்த்தினார்.

விருது பெற்ற ஆசிரியர்கள் 1. வ. ஏழுமலை அரசு உயர்நிலைப் பள்ளி தென்கோடி பாக்கம், கோ.ராமமூர்த்தி. அரசு உயர்நிலைப் பள்ளி, காட்ராம்பாக்கம். D.சிவக்குமார். அரசு மேனிலைப்பள்ளி. வானூர். வ.பத்மநாபன், அரசு மேனிலைப்பள்ளி, கிளியனூர். சு. ராஜவேல். ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி. காவணிப் பாக்கம். பி.பாண்டிச்செல்வம்அரசு உயர் நிலைப் பள்ளி T. புதுப்பாளையம். E.குமார்ஊ ராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி. கோழிப்பட்டு மு.உஷா.அரசு உயர்நிலை பள்ளிகுண்டலப் புலியூர் மற்றும் அதிக மாணவர்களைக் கொண்டு ஜே.ஆர்.சி அமைப்பை பள்ளிகளில் நடத்தி வரும்அரசமங்கலம் அரசு உயர்நிலைப்பள்ளி, செம்மார், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி. ஆகிய இரு பள்ளிக்கு நினைவு பரிசு வழங்கப்பட்டது. இதற்கான ஏற்பாட்டினை. விழுப்புரம் கல்விமாவட்ட ஜுனியர் ரெட் கிராஸ் மாவட்ட கன்வீனர். ம.பாபு செல்வதுரை தலைமையில் மாவட்டப்பொருளாளர்S.எட்வர்ட்தங்கராஜ்இணைக்கன்வீனர்கள்.S.ரவீந்திரன், E. தமிழழகன். ஆகியோர்ஏற்பாடுசெய்திருந்தனர்.மாவட்ட , மண்டல , வட்டாரஒருங்கிணைப்பாளர்கள்Pமரியராஜ், A. எட்வின், எலியாஸ்ஜெயகாந்தன்,சகாயநாதன் A. சரசு, ஆர். மாலினி தேவி, Jஹசீனா. கோகிலா, ஆகியோர் உடனிருந்தனர்.

# தேனி மாவட்ட கொடுவிலார்பட்டியில் அதிமுகவின் நீர் மோர் பந்தல் திறப்பு விழா



தேனி, மே. 9

பாரத ரத்னா புரட்சித்தலைவர் எம்ஜிஆர் இதய தெய்வம் புரட்சி தலைவி அம்மா தெய்வீக அருள் ஆசியுடன் கழகத்தின் காவலர் வருங்கால முதல்வர் தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் புரட்சித் தமிழர் எடப்பாடியார் ஆணைக்கிணங்க தேனி மேற்கு மாவட்டம் தேனி கிழக்கு ஒன்றிய கழகம்,சார்பாக

அருள்மிகு ஸ்ரீவீரபாண்டி கௌமாரியம்மன் கோயில் திருவிழாவை முன்னிட்டு கொடுவிலார்பட்டியில் நீர் மோர் பந்தல் திறப்பு விழா கழக அமைப்பு செயலாளர் தேனி மேற்கு மாவட்ட கழக செயலாளர் .T.K.ஜக்கையன் தலைமையில், தேனி நாடாளுமன்றத்தொகுதி வெற்றி வேட்பாளர், தேனி கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் V.T. நாராயணசாமி முன்னிலையி ல்தேனி மேற்கு ஒன்றிய ஒன்றிய கழக செயலாளர்V.R.தயாளன், சின்னமனூர் கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர்

எல்லப்பட்டி முருகன் மீனவர் அணி மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் நந்திமாறன்கோடை வெயில் வெப்பத்தை தாகம் தணிக்கும் வகையில் நீர்மோர் பந்தல் கொடுவிலார்பட்டி கிளை பகுதியில் திறக்கப்பட்டது,

இந்நிகழ்வில் தேனி மேற்கு மாவட்ட கழக நிர்வாகிகள்,ஒன்றிய கழக நிர்வாகிகள்சி த்திரவடிவேல் தர்மராஜ்சோலைமலைராஜன்முருகலட்சுமிரமேஷ்பாபுகிளை செயலாளர்கள்ராஜன் செல்வம் பெருமாள்நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக்கழகம் மனிதநேய மக்கள் கட்சியின் மாநில தலைவரும் சமுதாயத் தலைவருமான டாக்டர் எம் எச் ஜவாஹிருல்லா அவர்கள் தலைமையில் இன்று மதுரை வடக்கு மாவட்ட அலுவலகத்தில் மாவட்பத்தலைவர் எம்ஏ சீனி அஹமது தமுமுக மாவட்ட செயலாளர் ஜேகே இப்னு மமக மாவட்ட செயலாளர். கே அப்பாஸ் தலைமை நிர்வாக குழு உறுப்பினர் முகமது கவுஸ் மருத்துவ சேவை அணி மாநில பொருளாளர் அப்துல் ரபி மாவட்ட நிர்வாகிகள் முன்னிலையில் தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்ற கழகம் மனித நேய மக்கள் கட்சியில் வழக்கறிஞர் எம் ஜி குத்துபுதீன் முகமது யூசுப் சாதிக் பிலால் அப்பாஸ் சிக்கந்தர் உள்ளிட்ட சகோதரர்கள் தங்களை தமுமுக மமகவில் இணைத்து கொண்டனர் சமுதாயத் தலைவர் டாக்டர் எம் எச் ஜவாஹிருல்லா அவர்களை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகவேல் ராஜன் மற்றும் புதூர் ஜமாத் நிர்வாகிகள் வணிகர் சங்க பிரமுகர்கள் மரியாதை நிமித்தமாக சந்தித்தனர்

# மாநகர பேருந்தின் மேற்கூரையில் ஏறி கல்லூரி மாணவர்கள் அட்டகாசம்



சென்னை, மே. 9

பேருந்தின் மேற்கூரையில் ஏறி கல்லூரி மாணவர்கள் அட்டகாசம் செய்து வருகின்றனர். பொதுமக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அவ்வபோது போலீசார் அவர்களை பிடித்து எச்சரித்து அனுப்புவது வழக்கம்.

இந்நிலையில்சென்னை சென்ட்ரல் நிலையம் அருகே திருவிக நகர்விவேகானந்தர் இல்லம் மாநகர பேருந்தின் மேற்கூரையில் ஏறி மாணவர்கள் அட்டகாசம் செய்தனர்.

பின்னர்அவர்கள்பேருந்தின் மேற்கூரையில் இருந்து இறங்க கண்ணாடியை தட்டி, பேருந்தை நிறுத்தினர்.

இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# மணப்பாறையில் நடந்து சென்ற பெண்ணிடம் செயின் பறிக்க முயற்சி

மணப்பாறை, மே. 9

திருச்சி மாவட்டம், மணப்பாறை நகரைச் சேர்ந்தவர்எழிலரசி. இவர் இன்று காலை வேப்பிலை மாரியம்மன் கோவிலுக்குச் சென்றுவிட்டு மணப்பாறை பட்டி சாலை வழியாக தனது வீட்டுக்கு நடந்து சென்று கொண்டிருந்தார்.

உதயம் தியேட்டர் அருகே செல்லும்போது இவரை பின் தொடர்ந்து வந்த மர்ம நபர் ஒருவர் திடீரென இவரது கழுத்தில் அணிந்து இருந்த ஏழு சவரன் தாலி செயினை பறிக்க முயன்றார். செயினை பறிக்க விடாமல் எழிலரசி போராடினார்.

செயினை அறுக்க முடியாத நிலையில் அவரை கீழே தள்ளிவிட்ட வாலிபர் அங்கிருந்து தப்பி ஓட முயற்சித்தார்.

அப்போது அப்பகுதியில் கடை வைத்துள்ள குமரேசன் என்பவர் மர்ம நபரை ஓடிச்சென்று பிடித்தார். பின்னர் அப்பகுதி பொதுமக்கள் மர்ம நபரை அங்குள்ள மின்கம்பத்தில் கட்டி வைத்தனர்.

மக்கள் அவனிடம் விசாரித்த போது காரைக்குடி என மட்டும் கூறி பெயர் உள்ளிட்ட மற்ற விபரங்களைகூறவில்லை. இதுகுறித்து தகவல் அறிந்து வந்த அப்பகுதி பொதுமக்கள் வாலிபருக்கு தர்மஅடி கொடுத்தனர்.

இதுகுறித்து மணப்பாறை காவல்துறையினருக்கு அளிக்கப்பட்ட தகவலின் பேரில் சம்பவ இடத்திற்கு போலீசார் மர்ம நபரை காவல்நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரணைநடத்தி வருகின்றனர். இச்சம்பவத்தில் கை மற்றும் கழுத்தில் காயம் அடைந்த எழிலரசி மணப்பாறை தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார். காலை நேரத்தில் கோவிலுக்கு சென்றுவிட்டு வந்தபெண்ணிடம் வாலிபர் செயின் பறிப்பில் ஈடுபட முயன்று பொதுமக்கள் தர்ம அடி கொடுத்த சம்பவம் மணப்பாறை பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# கட்டணம் செலுத்தாமல் சுங்கச்சாவடி ஊழியர் மீது காரை ஏற்றிய டிரைவர்



மதுரை, மே.9

மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே கப்பலூரில் மத்திய அரசுக்கு சொந்தமான சுங்கச்சாவடி செயல்பட்டு வருகிறது. இதன் வழியாக நாள் ஒன்றுக்கு பல ஆயிரக்கணக்கான வாகனங்கள் சென்று வருகின்றன. இந்த நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு சுங்கச்சாவடியில் கட்டணம் செலுத்தாமல் கார் ஒன்று கடந்து செல்ல முயன்றது.

அப்போது அங்கு பணியில் இருந்த ஊழியர்கள் கட்டணம் செலுத்தாமல் சென்ற வாகனத்தை தடுத்து நிறுத்தினர். அப்போது காரில் இருந்தவர்கள் ஆஸ்பத்திரிக்கு அவசரமாக செல்லவேண்டும் என்று தெரிவித்துள்ளனர். ஆனால் காரை விட மறுத்ததால், அதன் டிரைவர் சுங்கச்சாவடி ஊழியர் மீது காரை மோதினார். இது தொடர்பான வீடியோ காட்சிகள் வைரலாகி பரபரப்பை ஏற்படுத்தியது.

மதுரையிலிருந்து விருதுநகர் நோக்கி செல்லக் கூடிய பதிவு எண் இல்லாத கார்களும், வேறு மாவட்டத்தில் இருந்து வரக்கூடிய கார்களும், திருமங்கலம் நகர் பகுதி வாகனங்கள் எனக் கூறி ஏமாற்றி, சுங்க வரி கட்டணம் செலுத்தாமல் செல்வது வாடிக்கையாகி வருவதாக புகார்கள் எழுந்தன.

மேலும், சுங்கச்சாவடி ஊழியர்கள் தங்களது உயிருக்கு பாதுகாப்பின்றி பணியாற்றும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும், இதுபோன்ற வாகனங்களை சுங்கச்சாவடி ஊழியர்கள், கட்டணம் செலுத்த கேட்டுக் கொள்ளும்போது வாக்குவாதம் மற்றும் கைகலப்பும் ஏற்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

இந்த சம்பவம் தொடர்பாக சுங்கச்சாவடி ஊழியர்கள் தங்கள் உயிருக்கு பாதுகாப்பு வேண்டி, போலீசாரிடம் புகார் அளித்துள்ளனர். கப்பலூர் சுங்கச்சாவடியில் தொடர்ந்து இது போன்ற பிரச்சனைகள் ஏற்பட்டு வருவதால் ஊழியர்கள் அச்சத்துடன் பணிகளை ஈடுபட்டு வருகின்ற நிலை ஏற்பட்டு வருவதாகவும் கூறியுள்ளனர்.

உள்ளூர் வாகனங்களுக்கு சுங்கச்சாவடியில் கட்டணம் வசூலிக்காத போதிலும் பதிவெண் இல்லாத கார்களும் உள்ளூர் வாகனம் என கூறி வாக்குவாதத்தில் ஈடுபட்டு ஊழியர்களை தாக்குவதும், ஊழியர்களுக்கு எந்தபாதுகாப்பும்இல்லை எனவும் சுங்கச்சாவடி நிர்வாகம் மற்றும் ஊழியர்கள் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# புதிதாக கட்டப்பட்டு வரும் பாலத்துடன் இணைப்பதற்காக மூடப்பட்ட தி.நகர் பாலம்




சென்னை: மே.9

தி.நகர் உஸ்மான் ரோடு பாலத்தையும், அண்ணா சாலையையும் இணைக்கும் வகையில் புதிய பாலம் கட்டப்பட்டு வருகிறது.

ரூ.131 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வரும் இந்த புதிய பாலம் 55 தூண்களுடன் 7.5 மீட்டர் அகலத்தில் இரு வழி பாதையுடன் பிரமாண்ட பாலமாக உருவாகி வருகிறது.

இந்த பாலப் பணிகளில் 50 சதவீதத்துக்கும் மேற்பட்ட பணிகள் முடிவடைந்துஉள்ளன.அண்ணா சாலையில் இருந்தே தி. நகர் உஸ்மான் ரோடு பாலத்துடன் இணையும் வகையில் போடப்பட்டு உள்ள இந்த பாலத்தின் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. தி.நகர் ரங்கநாதன் தெருவை ஒட்டியுள்ள பாலத்தின் இணைப்பு பணிகள் நடைபெற உள்ளன. இதையொட்டி, ரங்கநாதன் தெரு சந்திப்பில் பாலம் சாய்வாக இறங்கும் இடத்தை இடித்து விட்டு அப்பகுதியில் உயரமான பாலம்அமைக்கப்பட உள்ளது. 120 மீட்டர் தூர தாழ்வான பாலத்தை இடிக்கும் பணிகள் தொடங்கி உள்ளன. இதற்காக தி.நகர் உஸ்மான் ரோடு பாலம் மூடப்பட்டு போக்குவரத்துக்கு தடை செய்யப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து உஸ்மான்ரோடு பகுதியில் இருந்து தி.நகர் பஸ் நிலையத்துக்கு செல்லும் வாகனங்கள் மாற்று பாதைகள் வழியாக திருப்பி விடப்பட்டு உள்ளன. மேம்பாலம் வழியாக சென்ற வானங்கள் தற்போது பிரகாசம் சாலை, பர்கிட் சாலை வழியாக பஸ் நிலையத்தை சென்றடைகின்றன. சி.ஐ.டி. பிரதான சாலையில் இருந்து வடக்கு உஸ்மான் ரோட்டுக்கு செல்லும் வாகனங்கள் தென்மேற்கு போக் சாலை வழியாக கண்ணம்மா பேட்டை சந்திப்புக்கு சென்று வெங்கட் நாராயணா சாலை வழியாக வடக்கு உஸ்மான் ரோட்டை சென்றடையலாம்.

தி.நகர் பகுதிக்கு செல்பவர்கள் தற்போது மூடப்பட்டுள்ள பாலம் வழியாகவே செல்வார்கள். வணிக நிறுவனங்கள் அதிகம் உள்ள பகுதி என்பதால் பாலம் மூடப்பட்டுள்ள நிலையில் வாகன ஓட்டிகள் சிரமத்தை சந்தித்து வருகிறார்கள். இதையடுத்து போக்குவரத்து நெரிசல் ஏற்படாத வகையில் மாற்று ஏற்பாடுகளை செய்ய போலீசார் ஆலோசித்து வருகிறார்கள். மேம்பால கட்டுமான பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்ட வருகிறது.

# கோடைவிடுமுறை: மெரினா, மாமல்லபுரம், வண்டலூருக்கு தினமும் 100 சிறப்பு பஸ்கள்

சென்னை, மே.9

கோடை வெப்பத்தில் இருந்து வாகன ஓட்டிகளை பாதுகாத்துக் கொள்ளும் வகையில் சென்னையில் 10 இடங்களில் பச்சை நிறத்திலான பசுமை நிழல் பந்தல்கள் அமைக்கப்பட உள்ளன. சென்னையில் போக்குவரத்து சந்திப்புகளில் நிற்கும் வாகன ஓட்டிகள் வெயிலின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். அவர்களை பாதுகாக்கும் வகையில் இந்த பந்தல்கள் அமைக்கப்பட உள்ளன.

இது தொடர்பாக மாநகராட்சி கமிஷனர் ராதாகிருஷ்ணன் கூறியதாவது: சிக்னல்களில் நிற்கும் வாகன ஓட்டிகளை வெப்பத்தில் இருந்து காப்பதற்காக 10 சந்திப்புகளில் நிழல் பந்தல்கள் அமைக்கப்பட உள்ளன. சென்னை மாநகராட்சி ரிப்பன்மாளிகை அருகே ராஜா முத்தையா சாலை ஈ.வெ.ரா. பெரியார் சாலை சந்திப்பு, திருமங்கலம் ரவுண்டானா சந்திப்பு, கீழ்ப்பாக்கம் நியூ ஆவடி சாலை, 3வது அவென்யூ சந்திப்பு, வள்ளுவர்கோட்டம் நெடுஞ்சாலை, கீழ்ப்பாக்கம் சேத்துப்பட்டு சந்திப்பு, அடையாறு எஸ்.பி.சாலைமேற்கு அவென்யூ சாலை சந்திப்பு, திருவான்மியூர் பழைய மாமல்லபுரம் சாலை உள்ளிட்ட 10 இடங்களில் பசுமை நிழற்பந்தல்கள் அமைக்கப்பட உள்ளன. 3 நாட்களில் இதனை அமைக்க முடிவு செய்துள்ளோம்.

சென்னை மாநகராட்சி பகுதியில் பொதுமக்களின் வசதிக்காக 199 இடங்களில் குடிநீர் வசதி ஏற்படுத்தப் பட்டுள்ளது. 1 லட்சத்து 10 ஆயிரம் பேருக்கு ஓ.ஆர்.எஸ். கரைசல் பாக்கெட்டுகளும் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு அவர் கூறினார்.

# சுட்டெரிக்கும் வெயிலால் தீப்பற்றி எரிந்த வங்கி ஊழியரின் கார்..



மணப்பாறை, மே. 9

திருச்சி மாவட்டம், மணப்பாறையை அடுத்த இடையபட்டியைச் சேர்ந்தவர் நாகராஜ் (வயது 45). இவர் தனியார் வங்கியில் ஊழியராக வேலை பார்த்து வருகிறார். இவரது காரை மணப்பாறை எடத்தெரு பகுதியில் நிறுத்தி வைத்திருந்தார்.

வேலைக்கு செல்வதற்காககாரைஸ்டார்ட்செய்ய முயன்ற போது திடீரென காரின் முன் பகுதியில் இருந்து தீப்பற்றி எரிய ஆரம்பித்தது. இதனால் அதிர்ச்சி அடைந்த அவர் காரில் இருந் இறங்கி அக்கம் பக்கத்தினர் உதவியுடன் மண்ணை கொட்டி தீயை அணைக்க முயன்றார்.

ஆனாலும் சிறிது நேரத்தில் தீப்பற்றி எரிந்தது. சுட்டெரிக்கும் வெயிலில் நெருக்கு கொழுந்துவிட்டு எரியவே அக்கம் பக்கத்தினர் இதுபற்றி மணப்பாறை தீயணைப்பு துறையினருக்கு தகவல் கொடுத்தனர். தகவலின் பேரில் தீயணைப்பு துறையினர் சம்பவ இடத்திற்கு சென்று தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

இருப்பினும் கார் முழுவதுமாக எரிந்து நாசமானது. பின்னர் சம்பவம் பற்றி தகவல் அறிந்த மணப்பாறை போலீசார் சம்பவஇடத்திற்குசென்று விசாரணை நடத்தினர். கார் தீப்பற்றி எரிந்த தகவல் அறிந்ததும் நூற்றுக்கணக்கான மக்கள் அந்த இடத்தில் திரண்டனர்.

சுட்டெரிக்கும் வெயில் காரணமாக கார் தீப்பற்றி எரிந்ததாக தெரிகிறது. இதுபற்றி விசாரணை நடந்து வருகிறது.

# கடும் வெயிலையும் பொருட்படுத்தாமல் சதுரகிரியில் பக்தர்கள் தரிசனம்: மருத்துவ வசதி இல்லை என புகார்



வத்திராயிருப்பு, மே. 9

விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பு அருகே உள்ள மேற்கு தொடர்ச்சி மலையில் பிரசித்தி பெற்ற சுந்தரசந்தன மகாலிங்கம் கோவில் உள்ளது. இங்கு மாதந்தோறும் பவுர்ணமி, அமாவாசையை முன்னிட்டு தலா 4 நாட்கள் பக்தர்கள் தரிசனம் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சித்திரை மாத அமாவாசை, பவுர்ணமியை முன்னிட்டுகடந்த 5ந்தேதி முதல் 8ந்தேதி வரைபக்தர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. கடந்த 2 நாட்களாக திரளான பக்தர்கள் சதுரகிரி மலையேறி சாமி தரிசனம் செய்தனர்.

சித்திரை மாத அமாவாசையான இன்று (7ந்தேதி) அதிகாலை சென்னை, கோவை, திருச்சி, ராமநாதபுரம், மதுரை, நெல்லை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் இருந்து ஏராளமானோர் வாகனங்கள் மூலம் மலையடி வாரமான தாணிப்பாறைக்கு வந்து காத்திருந்தனர். காலை 6 மணிக்கு மலைப்பாதை திறக்கப்பட்டது. முன்னதாக பக்தர்களின் உடமைகளை வனத்துறையினர் சோதனை செய்து மலையேற அனுமதித்தனர். உடல் நலம் பாதிக்கப்பட்டவர்கள், வயதானவர்கள் மலையேற அனுமதிக்கப்படவில்லை. தற்போது கோடை வெயில் கொளுத்தி வருவதால் பக்தர்கள் முன்னெச்சரிக்கையுடன் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மலைப்பாதை மற்றும் கோவில்களில் குடிநீர் வசதி செய்யப்பட்டிருந்தது. கடும் வெயிலையும் பொருட்படுத்தாமல் சிறுவர்கள், இளைஞர்கள், பெண்கள் என அனைத்து தரப்பினரும் உற்சாகத்துடன் மலையேறி சாமி தரிசனம் செய்தனர். பக்தர்களின் பாதுகாப்புக்காக மலைப் பாதைகளிலும் கோவில் பகுதியிலும் போலீசார், வனத்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

சித்திரை மாத அமாவாசையை முன்னிட்டு சுந்தர மகாலிங்கத்திற்கு இன்று காலை 21 வகையான அபிஷேகங்கள் செய்யப்பட்டு சிறப்பு பூஜைகள் நடந்தன. இதற்கான ஏற்பாடுகளை கோவில் பரம்பரை அறங்காவலர் ராஜா என்ற பெரியசாமி, செயல் அலுவலர் ராமகிருஷ்ணன் செய்திருந்தனர்.

பலர் முடி காணிக்கை செலுத்தினர். காலை 11 மணிக்கு வெயிலின் தாக்கம் அதிகமாக இருக்கும் என்பதால் பக்தர்கள் 10 மணிக்கே சாமி சரிசனம் செய்து விட்டு மலையில் இருந்து இறங்கினர். மேலும் பக்தர்களின் வசதிக்காக தாணிப்பாறையில் இருந்து மதுரை, திருமங்கலம், ஸ்ரீவில்லிபுத்தூர் உள்ளிட்ட முக்கிய பகுதிகளுக்கு கூடுதல் அரசு பஸ்கள் இயக்கப்பட்டன.

அமாவாசை, பவுர்ணமி நாட்களில் சாமி தரிசனம் செய்ய சதுரகிரிக்கு ஆயிரக்கணக்கானோர் வந்து செல்கின்றனர். மலை யேறும்போது சிலருக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டு மயங்கி விழுவதும், நெஞ்சுவலி ஏற்படுவது உள்ளிட்ட பிரச்சினைகள் அடிக்கடி ஏற்படுகிறது. எனவே மலையடிவாரத்தில் மருத்துவக்குழுவினர் சிகிச்சை அளிக்கும் வகையில் ஏற்பாடு செய்ய வேண்டுமென பக்தர்கள் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகின்றனர். ஆனால் இந்த முறை மருத்துவ வசதி செய்து தரப்படவில்லை. பக்தருக்கு சிறிது அசவுகரியம் ஏற்பட்டாலும் வத்திராயி ருப்பு மற்றும் திருமங்கலம் அரசு ஆஸ்பத்திரிக்கு தான் கொண்டு செல்ல வேண்டும். இதனால் உயிர்பலி ஏற்பட வாய்ப்புள்ளது. இதனால் பக்தர்களின் உயிருக்கு மதிப்பு அளித்து வருங்காலங் களில் தாணிப்பாறையில் மருத்துவ குழுவினரை பணிய மர்த்தி சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# பனை மரத்தில் இருந்து தவறி விழுந்து மூளைச்சாவு அடைந்த வாலிபரின் உடல் உறுப்புகள் தானம்



சேலம், மே.9

சேலம் மாவட்டம் சங்ககிரி சந்தைப்பேட்டை பால்வாய் பகுதியைச் சேர்ந்தவர் மணி. இவரது மகன் சந்தோஷ்குமார் (22) கூலித்தொழிலாளி. இவருக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. நேற்று முன்தினம் வீட்டின் அருகே உள்ள பனைமரத்தில் நுங்கு வெட்டுவதற்காக மரத்தின் மீது ஏறி உள்ளார். அப்போது எதிர்பாராத விதமாக சந்தோஷ்குமார் மரத்தின் மேலிருந்து கீழே விழுந்துள்ளார். தலையில் பலத்த காயமடைந்த அவரை அருகில் இருந்தவர்கள் மீட்டு சங்ககிரி அரசு மருத்துவ மனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். தொடர்ந்து அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து சிகிச்சை அளித்து வந்தனர். தீவிர சிகிச்சை அளித்து வந்த நிலையில் நேற்று இரவு சந்தோஷ்குமார் மூளைச்சாவு அடைந்ததாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து மூளைச்சாவு அடைந்த சந்தோஷ்குமாரின் உடல் உறுப்புகளை தானம் செய்ய அவரது பெற்றோர் முன்வந்தனர். தொடர்ந்து சேலம் அரசு மருத்துவமனை நிர்வாகம் சார்பில் உடனடியாக தமிழ்நாடு உடல் உறுப்பு மாற்று ஆணையத்திற்கு தகவல் தெரிவித்தனர். அதன் பேரில், மருத்துவக் குழுவினர் மூளைச்சாவடைந்த சந்தோஷ்குமார் உடலில் இருந்து இதயம், கல்லீரல், நுரையீரல், சிறுநீரகம் 2, சிறுகுடல், கார்னியா ஆகியவை எடுக்கப்பட்டது. இதயம் சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனைக்கும், கல்லீரல் சேலத்தில் உள்ள தனியார் மருத்துவமனைக்கும் மற்றும் கோவையில் உள்ள தனியார் மருத்துவமனைக்கும் வழங்கப்பட்டது. நுரையீரல் சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனைக்கும், ஒருசிறுநீரகம் சேலத்தில் உள்ள தனியார் மருத்துவமனைக்கும், மற்றொரு சிறுநீரகம் கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கும், சிறுகுடல் சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனைக்கும், கார்னியா சேலம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கும் தானமாக வழங்கப்பட்டது.

மூளைச்சாவு அடைந்து உடல்உறுப்புகளைதானம் செய்த சந்தோஷ்குமாருக்கு சேலம் அரசு மருத்துவ க்கல்லூரி மருத்துவமனை நிர்வாகம் சார்பாக அரசு மரியாதை வழங்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து அவரது உறவினர்களிடம் உடல் ஒப்படைக்கப்பட்டது.

# சித்தோடு அருகே 800 கிலோ தங்க நகைகளை கொண்டு சென்ற வேன் கவிழ்ந்து விபத்து



இந்த வேன் நள்ளிரவில் ஈரோடு மாவட்டம் சித்தோடு சமத்துவபுரம் பகுதியில் சேலம்கோவை தேசிய நெடுஞ்சாலையில் சேலம் நோக்கி சென்று கொண்டிருந்தது.

ஈரோடு, மே.9

கோவை மாவட்டத்தில் இருந்து சேலம் நோக்கி இரவு செக்யூல் லாஜிஸ்டிக் என்ற பெயரில் தங்க நகைகளை கொண்டு செல்லும் தனியார் வேன் சென்று கொண்டிருந்தது.

வேனை சசிகுமார் என்பவர் ஓட்டி வந்தார். தனியார் பாதுகாவலர் பால்ராஜ் என்பவர் துப்பாக்கி ஏந்திய பாதுகாப்புடன் உடன் வந்து கொண்டிருந்தார். வேனில் பல்வேறு தங்க நகைக் கடைகளில் பெறப்பட்ட 800 கிலோ தங்க நகைகள் இருந்தன. இதன் மதிப்பு ரூ.666 கோடியாகும்.

அப்போது ஒரு வளைவில் வேன் திரும்பிய போது திடீரென ஓட்டுனரின் கட்டுப்பாட்டை இழந்து தங்க நகைகளை கொண்டு வந்த வேன் திடீரென சாலையில் கவிழ்ந்தது. இந்த விபத்தில் ஓட்டுநர் சசிகுமார், தனியார் பாதுகாவலர் பால்ராஜ் ஆகியோர் காயம் அடைந்தனர்.

விபத்து குறித்து உடனடியாக சித்தோடு போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த போலீசார்தங்க நகைகளுடன் தேசிய நெடுஞ்சாலையில் கவிழ்ந்த வேனை பத்திரமாக மீட்டு சித்தோடு போலீஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர். அதேப்போல் விபத்தில் காயம் அடைந்த சசிகுமார், பால்ராஜ் ஆகியோரை மீட்டு சிகிச்சைக்காக பவானி அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

பின்னர் மற்றொரு வாகனத்தில் துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்புடன் 800 கிலோ தங்க நகைகள் பத்திரமாக சேலத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்த விபத்து தொடர்பாக சித்தோடு போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# இபாஸ் நடைமுறை அமலுக்கு வந்தது: சோதனைக்கு பின் வாகனங்கள் அனுமதி

ஊட்டி, மே. 9

நீலகிரி மாவட்டம் சர்வதேச சுற்றுலா தலமாக விளங்கி வருகிறது. இங்கு நிலவும் இதமான காலநிலையை அனுபவிக்கவும், சுற்றுலா தலங்களை கண்டு ரசிக்கவும் வெளி மாவட்டங்கள், வெளி மாநிலங்கள், வெளிநாடுகளில் இருந்து அதிகளவிலான சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர்.



ஆண்டுதோறும் 30 லட்சத்துக்கும் அதிகமான சுற்றுலா பயணிகள் வந்து செல்வார்கள். குறிப்பாக கோடை சீசன்களான ஏப்ரல், மே மாதங்களில் மட்டும் 10 லட்சத்திற்கும் அதிகமான சுற்றுலா பயணிகள் வருகை தருகிறார்கள்.

ஒரே நேரத்தில் ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகை தருவதால், அங்கு கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. மேலும் பசுமையான சுற்றுச்சூழலும் பாதிக்கப்படுகிறது. இதனை கருத்தில் கொண்டு நீலகிரிக்கு சுற்றுலா பயணிகள் வருவதற்கு இபாஸ் நடைமுறையை அமல்படுத்த வேண்டும் என சென்னை ஐகோர்ட்டு உத்தரவிட்டது.

இதையடுத்து தமிழக அரசு சார்பில் பல்வேறு வழிகாட்டு நெறிமுறைகளும் வெளியிடப்பட்டது. இபாஸ் பெறுவதற்கு என்று பிரத்யேகமாக https://epass.tnega.org என்ற இணையதளம் அறிமுகப்படுத்தப்பட்டது.

மேலும் இந்த இபாஸானது 3 வகை அடையாளக் கோடுகளுடன் வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி உள்ளூர் பொதுமக்களுக்கு பச்சைநிற இபாசும், வேளாண் பொருட்கள் கொண்டு செல்லும் வாகனங்கள், அடிப்படை தேவை, சரக்கு வாகனங்களுக்கு நீல நிற இபாசும், வர்த்தகம் மற்றும் சுற்றுலா பயணிகளுக்கு ஊதா நிறத்திலும் இபாஸ் வழங்கப்படுகிறது. அதே நேரத்தில் அரசு பஸ்களில் வருபவர்களுக்கு இபாஸ் தேவையில்லை என்றும், அரசு பஸ்களில் வருபவர்களின் விவரங்கள் போக்குவரத்து துறை மூலம் பெறப்படும் எனவும் மாவட்ட நிர்வாகம் அறிவித்து இருந்தது.

முதலே ஏராளமான சுற்றுலா பயணிகள் இந்த இணையதளத்தில் சென்று இபாசுக்கு விண்ணப்பித்தனர். அதில், சுற்றுலா பயணிகள் எங்கிருந்து வருகிறீர்கள். எத்தனை நாள் இங்கு தங்க உள்ளீர்கள் என பல்வேறு விவரங்கள் அதில் கேட்கப்பட்டிருந்தது. அதில் கேட்கப்பட்டுள்ள அனைத்து விவரங்களை பூர்த்தி செய்து சுற்றுலா பயணிகள் இபாஸ் பெற்றுக்கொண்டனர். விண்ணப்பித்த உடனே எளிதாக இபாஸ் கிடைத்ததால் சுற்றுலா பயணிகளும் மகிழ்ச்சி அடைந்தனர்.

நேற்று ஒரே நாளில் நீலகிரி வருவதற்கு 21,446 வாகனங்கள் இபாஸ் பெற்றுள்ளன. இதில் 2 லட்சத்து 78 ஆயிரம் பேர் நீலகிரிக்கு வருகை தர உள்ளனர்.

இன்று காலை முதல் நீலகிரியில் இபாஸ் நடைமுறை அமலுக்கு வந்தது. நீலகிரிக்கு வந்த அனைத்து வாகனங்களுமே தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

மாவட்ட எல்லைகளில் உள்ள கல்லார், நாடுகாணி, தொரப்பள்ளி, சோலாடி, பாட்டவயல் உள்பட 16க்கும் மேற்பட்ட சோதனை சாவடிகளில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. அங்கு வருவாய்த்துறையினர் மற்றும் போலீசார் அதிகளவில் குவிக்கப்பட்டு கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

அவர்கள் சோதனை சாவடி வழியாக ஊட்டிக்கு வரும் தனியார் பஸ்கள், வேன்கள், கார்கள், சரக்கு வாகனங்கள், லாரிகள் உள்பட அனைத்து வாகனங்களையும் நிறுத்தி அவர்கள் இபாஸ் பெற்றுள்ளனரா? என்பதை கண்காணிக்கின்றனர்.

அவர்களிடம் இபாஸ் இருக்கிறதா என்று கேட்டு விசாரிக்கும் போலீசார் இபாஸ் இருந்தால் மட்டுமே நீலகிரிக்குள் அனுமதித்து வருகிறார்கள். சுற்றுலா பயணிகள், வர்த்தக வாகனங்கள் தங்களுக்கான ஊதா நிறத்திலான இபாசையும், உள்ளூர் வாகனங்கள் தங்களுக்கு என்று கொடுக்கப்பட்டுள்ள பச்சை நிற இபாசை காண்பித்து சென்று வருகின்றனர்.

அவர்கள் நீலகிரிக்குள் சென்றதும் அங்குள்ள ஊட்டி தாவரவியல் பூங்கா, ரோஜா பூங்கா, குன்னூர் சிம்ஸ் பூங்கா, கோத்தகிரி நேரு பூங்கா, தொட்டபெட்டா மலைசிகரம், படகு இல்லம் உள்ளிட்டவற்றை கண்டு ரசிக்கின்றனர். இதனால் எங்கு பார்த்தாலும் சுற்றுலா பயணிகள் கூட்டமாகவே காணப்படுகிறது.

நேற்று இரவு முதல் மழை பெய்ததால் தற்போது ஊட்டியில் குளு,குளு காலநிலை நிலவி வருகிறது. இதனை அங்கு வந்திருக்கும் சுற்றுலா பயணிகள் ரசித்து அனுபவித்து வருகிறார்கள்.

இந்த இபாஸ் நடைமுறை காரணமாக போக்குவரத்து நெரிசலும் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் இருந்தது. வாகனங்கள் உடனுக்குடன் சென்றதால் வாகன ஓட்டிகளும் நிம்மதி அடைந்தனர். இபாஸ் நடைமுறை அமலுக்கு வந்துள்ளதால் உள்ளூர் மக்களும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# சவுக்கு சங்கருக்கு கஞ்சா சப்ளை செய்த வாலிபர் கைது

தேனி, மே.9

பெண் காவலர்கள் குறித்து அவதூறாக பேசிய வழக்கில் யூடியூபர் சவுக்கு சங்கரை தேனி அருகே உள்ள பழனிசெட்டிபட்டியில் கோவை சைபர் கிரைம் போலீசார் கைது செய்தனர். பூதிப்புரம் ரோட்டில் உள்ள தங்கும் விடுதியில் கடந்த 3ந் தேதி அதிகாலை சவுக்கு சங்கரை கைது செய்து கோவைக்கு அழைத்து சென்றனர். மேலும் அவருடன் தங்கி இருந்த சென்னை நுங்கம்பாக்கத்தைச் சேர்ந்த ராம்பிரபு, பரமக்குடியைச் சேர்ந்த ராஜரத்தினத்தை விசாரித்தனர்.





அவர்கள் வந்த காரில் சோதனை செய்தபோது 2.6 கிலோ கஞ்சா இருந்தது தெரிய வந்தது. இதனைத் தொடர்ந்து நடமாடும் தய அறிவியல் ஆய்வு வாகனம் மூலம் ஆய்வு செய்த போலீசார் சவுக்கு சங்கர், ராம்பிரபு, ராஜரத்தினம் ஆகிய 3 பேர் மீதும் கஞ்சா கடத்தல் வழக்கு, கைது செய்ய சென்ற போலீசாரை தரக்குறைவாக பேசியது உள்பட 7 பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்தனர்.

சவுக்கு சங்கர் கோவைக்கு அழைத்து செல்லப்பட்ட நிலையில் ராம்பிரபு, ராஜரத்தினம் ஆகியோர் கஞ்சா கடத்தல் வழக்கில் கைது செய்யப்பட்டு தேனி சிறையில் அடைக்கப்பட்டனர். இந்நிலையில் இந்த வழக்கில் 4வது நபராக ராமநாதபுரம் மாவட்டம் கமுதி அருகே ஆரைக்குடி வடக்குத் தெருவைச் சேர்ந்த திருமால் மகன் மகேந்திரன் (24) என்பவரை போலீசார் கைது செய்தனர். இது குறித்து போலீசார் தெரிவிக்கையில், சவுக்கு சங்கருக்கு மகேந்திரன் கஞ்சா விற்பனை செய்து வந்துள்ளார். இவரிடம் இருந்து 2.6 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது. தேனி மாவட்ட நீதிமன்றத்தில் 1 கிலோவுக்கு உட்பட்ட கஞ்சா வழக்குகள் மட்டுமே விசாரிக்க முடியும். ஆனால் மொத்தம் 3 கிலோ கஞ்சா பிடிபட்டுள்ளதால் இந்த வழக்கு தேனியில் இருந்து மதுரை போதை பொருள் சிறப்பு நீதிமன்றத்துக்கு மாற்றப்பட உள்ளது என்றனர்.

# குமரியில் 3வது நாளாக கடல் சீற்றம் நீடிப்பு: சுற்றுலா தலங்களில் போலீஸ் தீவிர கண்காணிப்பு

ராஜாக்கமங்கலம், மே. 9

குமரி மாவட்டம் முழுவதும் இன்றும் கடல் சீற்றமாக காணப்பட்டது. ஆரோக்கிய புரம் முதல் நீரோடி வரை உள்ள கடற்கரை கிராமங்களில் கடல் சீற்றம் அதிகமாக உள்ளதால் மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்க செல்லவில்லை.




ராட்சத அலைகள் 10 அடி முதல் 15 அடி வரை உயரத்திற்கு எழும்பியது. கடற்கரை ஒட்டி உள்ள தூண்டில் வளைவுகளில் ராட்சத அலைகள் வேகமாக மோதியது. 3வது நாளாக கடல் சீற்றமாக உள்ளதால் கடற்கரைக்கு செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டு உள்ளது.


இதனால் கடற்கரை பகுதி வெறிச்சோடி காணப்படுகிறது. ராஜாக்கமங்கலம் லெமூர் கடற்கரை பகுதியில் நேற்று பயிற்சி டாக்டர்கள் தடையை மீறி கடலில் கால் நனைத்தபோது ராட்சத அலையில் சிக்கி 5 பேர் பலியானார்கள்.

இதையடுத்து அந்த பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. போலீசார் அந்த பகுதியில் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். கடற்கரை பகுதிக்கு நுழைவதற்கு தடைவிதிக்கப்பட்டு இருந்தது. லெமூர் கடற்கரையின் நுழைவு வாயில் மூடப்பட்டு இருந்தது. நுழைவு வாயிலில் எச்சரிக்கை பலகையும் வைக்கப்பட்டிருந்தது.

நுழைவு வாயில் அருகே உள்ள பாதை வழியாக பொதுமக்கள் செல்லாத வகையில் சிவப்பு கலரில் கொடி கட்டப்பட்டு இருந்தது. லெமூர் கடற்கரைக்கு வந்த சுற்றுலா பயணிகளை போலீசார் திருப்பி அனுப்பினார்கள். கடற்கரைக்குள் யாரையும் நுழைய அனுமதிக்கவில்லை.

சொத்தவிளை கடற்கரை, முட்டம் கடற்கரை, கன்னியாகுமரி கடற்கரை பகுதிகளிலும் போலீசார் இன்றுதீவிரகண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர். கடற்கரை பகுதியில் சுற்றுலா பயணிகள் யாரையும் நுழைய அனுமதிக்கவில்லை. கடலோரகாவல் படை போலீசார் கடற்கரை பகுதிகளில் தீவிரமாக கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர்.

# கோவையை குளிர்வித்த கோடை மழை



ஊட்டி, மே. 9

நீலகிரி மாவட்டம் சர்வதேச சுற்றுலா தலமாக விளங்கி வருகிறது. இங்கு நிலவும் இதமான காலநிலையை அனுபவிக்கவும், சுற்றுலா தலங்களை கண்டு ரசிக்கவும் வெளி மாவட்டங்கள், வெளி மாநிலங்கள், வெளிநாடுகளில் இருந்து அதிகளவிலான சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர்.

ஆண்டுதோறும் 30 லட்சத்துக்கும் அதிகமான சுற்றுலா பயணிகள் வந்து செல்வார்கள். குறிப்பாக கோடை சீசன்களான ஏப்ரல், மே மாதங்களில் மட்டும் 10 லட்சத்திற்கும் அதிகமான சுற்றுலா பயணிகள் வருகை தருகிறார்கள்.

ஒரே நேரத்தில் ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகை தருவதால், அங்கு கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. மேலும் பசுமையான சுற்றுச்சூழலும் பாதிக்கப்படுகிறது. இதனை கருத்தில் கொண்டு நீலகிரிக்கு சுற்றுலா பயணிகள் வருவதற்கு இபாஸ் நடைமுறையை அமல்படுத்த வேண்டும் என சென்னை ஐகோர்ட்டு உத்தரவிட்டது.

இதையடுத்து தமிழக அரசு சார்பில் பல்வேறு வழிகாட்டு நெறிமுறைகளும் வெளியிடப்பட்டது. இபாஸ் பெறுவதற்கு என்று பிரத்யேகமாக https://epass.tnega.org என்ற இணையதளம் அறிமுகப்படுத்தப்பட்டது.

மேலும் இந்த இபாஸானது 3 வகை அடையாளக் கோடுகளுடன் வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி உள்ளூர் பொதுமக்களுக்கு பச்சைநிற இபாசும், வேளாண் பொருட்கள் கொண்டு செல்லும் வாகனங்கள், அடிப்படை தேவை, சரக்கு வாகனங்களுக்கு நீல நிற இபாசும், வர்த்தகம் மற்றும் சுற்றுலா பயணிகளுக்கு ஊதா நிறத்திலும் இபாஸ் வழங்கப்படுகிறது. அதே நேரத்தில் அரசு பஸ்களில் வருபவர்களுக்கு இபாஸ் தேவையில்லை என்றும், அரசு பஸ்களில் வருபவர்களின் விவரங்கள் போக்குவரத்து துறை மூலம் பெறப்படும் எனவும் மாவட்ட நிர்வாகம் அறிவித்து இருந்தது.

முதலே ஏராளமான சுற்றுலா பயணிகள் இந்த இணையதளத்தில் சென்று இபாசுக்கு விண்ணப்பித்தனர். அதில், சுற்றுலா பயணிகள் எங்கிருந்து வருகிறீர்கள். எத்தனை நாள் இங்கு தங்க உள்ளீர்கள் என பல்வேறு விவரங்கள் அதில் கேட்கப்பட்டிருந்தது. அதில் கேட்கப்பட்டுள்ள அனைத்து விவரங்களை பூர்த்தி செய்து சுற்றுலா பயணிகள் இபாஸ் பெற்றுக்கொண்டனர். விண்ணப்பித்த உடனே எளிதாக இபாஸ் கிடைத்ததால் சுற்றுலா பயணிகளும் மகிழ்ச்சி அடைந்தனர்.

நேற்று ஒரே நாளில் நீலகிரி வருவதற்கு 21,446 வாகனங்கள் இபாஸ் பெற்றுள்ளன. இதில் 2 லட்சத்து 78 ஆயிரம் பேர் நீலகிரிக்கு வருகை தர உள்ளனர்.

இன்று காலை முதல் நீலகிரியில் இபாஸ் நடைமுறை அமலுக்கு வந்தது. நீலகிரிக்கு வந்த அனைத்து வாகனங்களுமே தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

மாவட்ட எல்லைகளில் உள்ள கல்லார், நாடுகாணி, தொரப்பள்ளி, சோலாடி, பாட்டவயல் உள்பட 16க்கும் மேற்பட்ட சோதனை சாவடிகளில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. அங்கு வருவாய்த்துறையினர் மற்றும் போலீசார் அதிகளவில் குவிக்கப்பட்டு கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

அவர்கள் சோதனை சாவடி வழியாக ஊட்டிக்கு வரும் தனியார் பஸ்கள், வேன்கள், கார்கள், சரக்கு வாகனங்கள், லாரிகள் உள்பட அனைத்து வாகனங்களையும் நிறுத்தி அவர்கள் இபாஸ் பெற்றுள்ளனரா? என்பதை கண்காணிக்கின்றனர்.

அவர்களிடம் இபாஸ் இருக்கிறதா என்று கேட்டு விசாரிக்கும் போலீசார் இபாஸ் இருந்தால் மட்டுமே நீலகிரிக்குள் அனுமதித்து வருகிறார்கள். சுற்றுலா பயணிகள், வர்த்தக வாகனங்கள் தங்களுக்கான ஊதா நிறத்திலான இபாசையும், உள்ளூர் வாகனங்கள் தங்களுக்கு என்று கொடுக்கப்பட்டுள்ள பச்சை நிற இபாசை காண்பித்து சென்று வருகின்றனர்.

அவர்கள் நீலகிரிக்குள் சென்றதும் அங்குள்ள ஊட்டி தாவரவியல் பூங்கா, ரோஜா பூங்கா, குன்னூர் சிம்ஸ் பூங்கா, கோத்தகிரி நேரு பூங்கா, தொட்டபெட்டா மலைசிகரம், படகு இல்லம் உள்ளிட்டவற்றை கண்டு ரசிக்கின்றனர். இதனால் எங்கு பார்த்தாலும் சுற்றுலா பயணிகள் கூட்டமாகவே காணப்படுகிறது.

நேற்று இரவு முதல் மழை பெய்ததால் தற்போது ஊட்டியில் குளு,குளு காலநிலை நிலவி வருகிறது. இதனை அங்கு வந்திருக்கும் சுற்றுலா பயணிகள் ரசித்து அனுபவித்து வருகிறார்கள்.

இந்த இபாஸ் நடைமுறை காரணமாக போக்குவரத்து நெரிசலும் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் இருந்தது. வாகனங்கள் உடனுக்குடன் சென்றதால் வாகன ஓட்டிகளும் நிம்மதி அடைந்தனர். இபாஸ் நடைமுறை அமலுக்கு வந்துள்ளதால் உள்ளூர் மக்களும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# மார்த்தாண்டம் மேம்பாலத்தில் திடீர் உடைப்பு

குழித்துறை, மே.9

மார்த்தாண்டத்தில் போக்குவரத்து நெருக்கடியை குறைக்கும் வகையில் மேம்பாலம் அமைக்கப்பட்டது. பம்மம் பகுதியில் உள்ள அரசு விரைவு போக்குவரத்து கழக பணிமனையிலிருந்து 2.5 கிலோ மீட்டர் தூரத்திற்கு மார்த்தாண்டம் மேம்பாலம் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு ரூ.222 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. மார்த்தாண்டம் மேம்பாலம் தமிழகத்தில் முதல் இரும்புப்பாலமாகும். இந்த மேம்பாலத்தில் 112 ராட்சத பில்லர்கள் (தூண்கள்) அமைக்கப்பட்டது.



இதில் 21 தூண்கள் கான்கிரீட்டால் ஆனவை. மற்ற தூண்கள் அனைத்தும் இரும்பால் ஆனவை. இந்தபாலம்திறக்கப்பட்டு போக்குவரத்து தொடங்கப்பட்டது முதல் மார்த்தாண்டத்தில் போக்குவரத்து நெருக்கடி குறைய தொடங்கியது. பாலத்தின் வழியாக வாகனங்கள் செல்வதற்கு பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் இன்று காலை அதிக பாரம் ஏற்றிச் சென்ற கனரக லாரிகள் வரிசையாக பாலத்தில் நின்றதாக கூறப்படுகிறது. இந்நிலையில் பாலம் தொடங்குகின்ற பம்மம் பகுதியில் 100 மீட்டர் தொலைவில் சாலையின் மையப்பகுதியில் 2 மீட்டர் விட்டத்தில் சிமெண்ட் கலவை உடைந்து விழுந்தது. ஆனால் சாலையின் தூண்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை. தற்போது நாகர் கோவிலில் இருந்து திருவனந்தபுரம் மார்க்கமாக செல்கின்ற போக்குவரத்துகள் நிறுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து பஸ்கள் அனைத்தும் பாலத்தின் கீழ்பகுதி வழியாக இயக்கப்பட்டது. இதனால் மார்த்தாண்டத்தில் கடும் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டுள்ளது. பாலத்தில் உடைப்பு ஏற்பட்டது பற்றிய தகவல் உயர் அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்டது. அவர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து உடைப்பு ஏற்பட்ட பகுதியை பார்வையிட்டனர்.

அதனை சுற்றி தடுப்பு வேலிகள் அமைக்கப்பட்டுள்ளது. உடைப்பு ஏற்பட்ட பகுதியில் என்னென்ன நடவடிக்கைகள் மேற் கொள்ள வேண்டும் என்பது குறித்து ஆலோசனை நடத்தி வருகிறார்கள். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இது குறித்து பொதுமக்கள் கூறுகையில், மார்த்தாண்டம் பாலம் கட்டிய பிறகு சரியாக பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வில்லை. பாலத்தின் மேல் உள்ள சாலை குண்டும், குழியுமாக காட்சியளித்தது.

சாலையில் உள்ள பள்ளங்களில் மழை நேரங்களில் தண்ணீரும் தேங்கி நின்றது. தற்போது கனரக வாகனங்களில் அதிக எடையில் கனிம வளங்கள் பாலத்தின் வழியாக கொண்டு செல்லப்பட்டு வருகிறது. நேற்று இரவும் கனிம வள வாகனங்கள் அணிவகுத்து நின்றதே பாலம் சேதம் அடைவதற்கு காரணம் என குற்றம் சாட்டினர்.

# மது போதை தகராறில் வாலிபர் கொலை

தஞ்சாவூர்: மே.9

தஞ்சை அருகே உள்ள சானூரப்பட்டியை சேர்ந்தவர் ஹரிஹரன் (வயது 27). இவர் திருப்பூரில் உள்ள ஒரு நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தார். தற்போதுவிடுமுறைக்காக சொந்த ஊருக்கு வந்திருந்தார்.

இந்த நிலையில் ஹரிஹரன் நேற்றிரவு தஞ்சை புதிய பஸ் நிலையத்துக்கு சென்றார்.

அப்போது அவர் அங்குள்ள ஒரு டாஸ்மாக் கடை அருகே மது குடித்துக் கொண்டிருந்த சிலரிடம் மது எங்கே கிடைக்கும் என கேட்டுள்ளார்.

இதில் குடிபோதையில் இருந்த நபர்களுக்கும், ஹரிஹரனுக்கும் இடையே திடீரென வாக்குவாதம் ஏற்பட்டது.

வாக்குவாதம் முற்றவே ஹரிஹரனை சரமாரியாக தாக்கினர்.

இதில் கீழே விழுந்து காயமடைந்த ஹரிஹரன் சம்பவ இடத்திலேயே பலியானார்.

இது பற்றி தகவல் அறிந்த தஞ்சை மருத்துவக் கல்லூரி போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து ஹரிஹரன் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அரசு மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

இது குறித்த புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து ஹரிஹரனை கொலை செய்தவர்கள் யார்? என தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் தஞ்சையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# வெள்ளை நிற அல்பினோ வகை எருமை: ஆச்சரியத்துடன் பார்த்து செல்லும் பொதுமக்கள்

வேலாயுதம்பாளையம்: கரூர் மாவட்டம் நொய்யல் அருகே சேமங்கி பகுதியைச் சேர்ந்தவர் முருகேசன் (55). விவசாயியான இவர் மாடுகள் வளர்த்து வருகிறார். இவர் வளர்த்து வந்த எருமை மாடு ஒன்று சினை பிடிக்காததால், கால்நடை மருத்துவரை அணுகி, சினை ஊசி போட்டுள்ளார். இதன் காரணமாக எருமை மாடு சினையானது. உரிய நாட்களுக்கு பின்னர் அந்த எருமை, கன்று ஒன்றை ஈன்றுள்ளது. எருமை ஈன்ற கன்றை பார்த்த முருகேசன் ஆச்சரியம் அடைந்துள்ளார். காரணம் அந்த கன்று வெள்ளை நிறத்தில் இருந்துள்ளது. இதன் காரணமாக அந்த கன்றை மிகவும் கவனமாக அவர் வளர்த்து வருகிறார்.

இந்நிலையில் வெள்ளை எருமை மாட்டை பார்ப்பதற்கு நாள்தோறும் அப்பகுதி மக்கள் விவசாயினுடைய வீட்டிற்கு வந்து செல்கின்றனர். இதனால் முருகேசன் வீட்டில் எப்போதும் பொருட்காட்சி நடப்பதை போல கூட்டம் இருந்து கொண்டே இருக்கிறது. இளம் வாலிபர்களும், பெண்களும் வெள்ளை எருமையுடன் செல்பி எடுத்து அதனை வலைதளங்களில் பகிர்ந்து வருகின்றனர்.

இது குறித்து கால்நடை வளர்ப்பில் அனுபவம் வாய்ந்த முதியவர் ஒருவர் கூறும்போது:

சினை பிடிப்பதற்காக போடப்படும் ஊசி வெளிநாடுகளில் இருந்து வருகிறது. அவ்வாறு வந்த ஊசியில், வெளிநாடுகளில் உள்ள கலப்பின மாடுகளில் இருந்து பெறப்பட்ட



விந்தணு கலந்து வந்திருக்கலாம். எனவே எருமை வெள்ளையாக உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

மருத்துவரீதியாக இதற்கான காரணம் மெலனின் என்று சொல்லப்படுகிறது. உடம்பில் மெலனின் சுரக்காதபோது இவ்வாறு வெண்மை நிறம் ஏற்படுவதாக மருத்துவ ஆராய்ச்சியாளர்களால் சொல்லப்படுகிறது. இப்படிப் பிறக்கும் விலங்குகளை அல்பினோ வகை விலங்குகள் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். 10 ஆயிரத்து ஓர் உயிரினம் இப்படிப் பிறப்பதாக அவர்களின் ஆய்வில் தெரியவந்துள்ளது.

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023
9.5.2024

## 'டாக்சிக்' படத்தில் நயன்தாரா? வெளியான தகவல்




'கே.ஜி.எப்' படம் மூலம் இந்தியா முழுவதும் பிரபலமானவர் யஷ். இவர் தற்போது கே.வி.என் புரொடக்சன்ஸ் தயாரிக்கும் 'டாக்சிக்' படத்தில் நடித்து வருகிறார். இது தொடர்பான அறிவிப்பு வீடியோ பலரது கவனத்தை ஈர்த்திருந்தது. அதில் 2025ம் ஆண்டு ஏப்ரல் 10ம் தேதி இப்படம் வெளியாகவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்படம், கோவாவில் போதைப் பொருள் நடத்தும் ஒரு கும்பலை மையப்படுத்தி ஆக்சன் நிறைந்த படமாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

இப்படத்தில் கரீனா கபூர், யஷின் அக்கா கதாபாத்திரத்தில் நடிக்கவுள்ளதாகவும் ஹீரோயினாக கியாரா அத்வானி கமிட்டாகியுள்ளதாகவும் பாலிவுட் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் கால்ஷீட் பிரச்சினை காரணமாக கரீனா கபூர் விலகிவிட்டதாகத் கூறப்படுகிறது.

இதையடுத்துஅந்தபாத்திரத்தில்நயன்தாராநடிக்கஇருப்பதாகதகவல்வெளியாகியுள்ளது.கதையைகேட்டுவிட்டு நடிக்க சம்மதித்துள்ளதாகவும் இதுதொடர்பான ஒப்பந்தத்தில் நயன்தாரா கையெழுத்திட்டபின், அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகும் என்றும் தெரிகிறது.

## மோகன்லால் இயக்கி நடிக்கும் 'பரோஸ்' வெளியாகும் தேதி அறிவிப்பு



பிரபல நடிகர் மோகன்லால். இவர் தற்போது ஒரு படத்தை இயக்குகிறார். இது இவர் இயக்கும் முதல் படமாகும். இப்படத்திற்கு 'பரோஸ்' என்று பெயரிடப்பட்டுள்ளது.இந்தப்படத்தில்குருசோமசுந்தரம், மீரா ஜாஸ்மின், ஸ்பானிஷ் நடிகை பாஸ் வேகா, ரபேல் அமர்கோ உட்பட பலர் நடித்துள்ளனர். அந்தோணி பெரும்பாவூர் தயாரிக்கிறார்.

குழந்தைகளைக் கவரும் விதமாக உருவாகும் இந்தப் படத்துக்கு சந்தோஷ் சிவன் ஒளிப்பதிவு செய்துள்ளார். லிடியன் நாதஸ்வரம் இசை அமைக்கிறார். 3டியில் உருவாகும் இந்தப் படம், பான் இந்தியா முறையில் வெளியாக இருக்கிறது.

வாஸ்கோடகாமாவின்மதிப்புமிக்கபொக்கிஷங்களைப் பாதுகாத்த,பாதுகாவலரானபரோஸ்என்பவரின்வாழ்க்கை கதைதான் இந்தப் படம் என்கிறார்கள். இந்நிலையில், இப்படம் ஓணம் பண்டிகையை முன்னிட்டு செப்டம்பர் 12ம் தேதி திரையரங்குகளில் வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## 'மஞ்சுமெல் பாய்ஸ்': 'பாராட்டுக்கு உண்மையிலேயே தகுதியானதுதான்' ராஷி கன்னா





இயக்குனர் சிதம்பரம் இயக்கத்தில் உருவாகிய திரைப்படம் 'மஞ்சுமெல் பாய்ஸ்'. இப்படத்தில் நடிகர்கள் சவுபின் சாகிர், ஸ்ரீநாத் பாசி ஆகியோர் முன்னணி கதாபாத்திரங்களில் நடித்தனர். கொடைக்கானல் குணா குகையை மையப்படுத்தி வெளியான இப்படம் கேரளாவை விட தமிழகத்தில் பெரும் வெற்றியைப் பெற்று அதிக வசூலைக் குவித்தது.

இதுவரை, தமிழகத்தில் வெளியான மலையாளப் படங்களில் அதிக வசூலைக் குவித்த படம் என்கிற சாதனையை படைத்திருக்கிறது 'மஞ்சுமெல் பாய்ஸ்'. 'மஞ்சுமெல் பாய்ஸ்' திரைப்படம் உலகளவில் ரூ.240 கோடிக்கும் அதிகமாக வசூலித்து ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. இப்படம் கடந்த 5ம் தேதி ஓடிடியில் வெளியானது.

இந்நிலையில், நடிகை ராஷி கன்னா 'மஞ்சுமெல் பாய்ஸ்' படத்தை பாராட்டி தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் ஸ்டோரி பகிர்ந்துள்ளார். அதில், 'மஞ்சுமெல் பாய்ஸ்' ஒரு ரத்தினம். சிறந்த திரைப்பட அனுபவம். படம் பெறும் பாராட்டுக்கு உண்மையிலேயே தகுதியானதுதான். முழு குழுவிற்கும் பாராட்டுகள். இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## துருவ் விக்ரமின் 'பைசன்' திருநெல்வேலியில் பூஜையுடன் தொடங்கிய படப்பிடிப்பு



கடந்த2018ம்ஆண்டுவெளியான'பரியேறும்பெருமாள்' திரைப்படம் மூலம் தமிழ் சினிமாவில் இயக்குனராக அறிமுகமானவர் மாரி செல்வராஜ். இந்த திரைப்படம் மிகுந்த பாராட்டை பெற்றது. இதையடுத்து, தனுஷ் நடித்த 'கர்ணன்', உதயநிதி ஸ்டாலின் நடித்த 'மாமன்னன்', 'வாழை' உள்ளிட்ட படங்களை மாரி செல்வராஜ் இயக்கினார்.

இதைத் தொடர்ந்து நடிகர் துருவ் விக்ரம் கதாநாயகனாக நடிக்கும் புதிய படத்தை மாரி செல்வராஜ் இயக்குகிறார். இந்த படத்தை பா. ரஞ்சித்தின் நீலம் ஸ்டுடியோஸ் மற்றும் அப்ளாஸ் என்டர்டெயின்மெண்ட் நிறுவனம் இணைந்து தயாரிக்கிறது.

இப்படத்திற்கு 'பைசன்' என்று படக்குழு பெயரிட்டுள்ளது. இப்படத்தின் படப்பிடிப்பு திருநெல்வேலியில் இன்று பூஜையுடன் தொடங்கியது. பூஜை விழாவில் படக்குழுவினரோடு சிறப்பு விருந்தினராக நடிகர் விக்ரமும் கலந்து கொண்டார். அப்போது அவரிடம் புகைப்படம் எடுக்க மக்கள் திரண்டனர்.

## அரண்மனை 4 தமன்னாவை பாராட்டிய விஜய் வர்மா



சுந்தர்.சி இயக்கத்தில் கடந்த 2021ம் ஆண்டு வெளியான திரைப்படம் 'அரண்மனை 3'. இந்த படத்தில் ஆர்யா, ராஷி கன்னா, ஆண்ட்ரியா, சாக்சி அகர்வால் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருந்தனர். அவ்னி சினிமேக்ஸ் நிறுவனம் சார்பில் குஷ்பு தயாரித்திருந்த இப்படத்தை உதயநிதி ஸ்டாலினின், ரெட் ஜெயன்ட் மூவிஸ் நிறுவனம் வெளியிட்டது. இப்படம் ரசிகர்கள் மத்தியில் கலவையான விமர்சனங்களை பெற்றது.

இந்நிலையில், இயக்குனர் சுந்தர்.சி இயக்கத்தில் அரண்மனை 4 திரைப்படம் உருவாகி உள்ளது. இப்படத்தின் முந்தைய மூன்று பாகங்களில் நடித்துள்ள சுந்தர்.சி இந்த பாகத்திலும் நடித்துள்ளார். மேலும் இதில் தமன்னா, ராஷி கண்ணா,யோகிபாபுஉள்ளிட்டோர்முக்கியகதாபாத்திரங்களில்நடித்துள்ளனர். இப்படத்திற்கு ஹிப் ஹாப் ஆதி இசையமைத்துள்ளார். முன்னதாக இந்த படத்தின் டிரைலர் மற்றும் 'அச்சச்சோ' என்ற முதல் பாடலும் வெளியாகின.

கடந்த 3ம் தேதி இப்படம் திரையரங்குகளில் வெளியானது. வெளியாகி மூன்று நாட்களில் இப்படம் ரூ.15 கோடிக்கும் மேல் வசூலித்துள்ளது. படம் கலவையான விமர்சனங்களை பெற்று வந்தாலும் தமன்னாவின் நடிப்பு சிறப்பானதாக இருந்தது. இந்நிலையில், தமன்னாவின் காதலன் விஜய் வர்மா தமன்னாவை பாராட்டி இணையத்தில் பதிவு ஒன்றை பதிவிட்டுள்ளார். அந்த பதிவில், அரண்மனை 4ல் உங்களுக்கு கிடைத்த வரவேற்புக்கு வாழ்த்துகள்!. இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## மீண்டும் டீப் பேக் வீடியோவில் ஆலியா பட்




செயற்கைநுண்ணறிவுதொழில்நுட்படீப்பேக்வீடியோக்கள்நடிகைகளுக்கு பெரிய அச்சுறுத்தலாக உள்ளன. இதன்மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்என்றுஅமிதாப்பச்சன்உள்ளிட்டபலநடிகர்,நடிகைகள்வலியுறுத்தி உள்ளனர்.

போலீசாரும்நடவடிக்கைஎடுத்துவருகின்றனர்.ஆனாலும்அடங்கவில்லை. தொடர்ந்து டீப் பேக் ஆபாச வீடியோக்கள் வெளிவந்த வண்ணம் உள்ளன.

ஏற்கனவே நடிகை ஆலியா பட்டின் டீப் பேக் வீடியோ வெளியானது. இன்னொரு பெண் உடலோடு ஆலியா பட்டின் முகத்தை ஒட்டி வெளியிட்டு இருந்தனர். தொடர்ந்து பிரியங்கா சோப்ரா, கஜோல், கத்ரினா கைப், ராஷ்மிகா மந்தனா போன்றோரின் டீப் பேக் வீடியோக்களும் வெளிவந்தன.

இப்போது மீண்டும் ஆலியா பட்டின் டீப் பேக் வீடியோ வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. முன்னதாக பாலிவுட் நடிகை வாமிகா இன்ஸ்டாகிராம் பக்கத்தில் தனது வீடியோ ஒன்றை வெளியிட்டிருந்தார். தற்போது அந்த வீடியோவில் இருந்த வாமிகாவின் உடலோடு ஆலியா பட்டின் முகத்தை ஒட்டி இந்த டீப் பேக் வீடியோவை வெளியிட்டு உள்ளனர். இதற்கு ரசிகர்கள் பல்வேறு விதமான கருத்துகளை பதிவிட்டு வருகின்றனர்.

## டேபிள் டென்னிஸ்: இந்திய வீராங்கனை மணிகா பத்ரா அசத்தல் வெற்றி




சவுதி அரேபியாவில் சவுதி ஸ்மேஷ் 2024 என்ற பெயரிலான டேபிள் டென்னிஸ் போட்டிகள் நடந்து வருகின்றன. இதில், பெண்கள் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் நட்சத்திர வீராங்கனையான மணிகா பத்ரா மற்றும் உலகதரவரிசையில் 2வது இடத்தில் உள்ள வாங் மேன்யு விளையாடினர்.

இந்த போட்டியில், தொடக்கம் முதலே விறுவிறுப்பு காணப்பட்டது. முதல் செட்டை வாங் கைப்பற்றி பத்ராவுக்கு பின்னடைவை ஏற்படுத்தினார். எனினும், அதிரடியாக விளையாடிய பத்ரா அடுத்த செட்டை தன்வசப்படுத்தினார். தொடர்ந்து, அடுத்தடுத்த செட்களை எளிதில் கைப்பற்றி மணிகா பத்ரா வெற்றி பெற்றார். இந்த போட்டியில், 6– 11, 11– 5, 11– 7, 12– 10 என்ற செட் கணக்கில் பத்ரா வெற்றி பெற்றார். இதனால், 16 சுற்றுகள் கொண்ட அடுத்த போட்டிக்கு அவர் முன்னேறி உள்ளார்.

இதற்கு முன் மார்ச் மாதத்தில் நடந்த சிங்கப்பூர் ஸ்மேஷ் 2024 போட்டியில், வாங் சாம்பியன் பட்டம் வென்றார். இந்த போட்டியிலும் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையுடன் இருந்த வாங்கிற்கு, மணிகா பத்ரா அதிர்ச்சி அளித்துள்ளார். கடந்த காலங்களில் நடந்த 5 போட்டிகளின்போதும், பத்ராவை வாங் வீழ்த்தி வெற்றி பெற்றார். அவர்கள் இருவரும் நேருக்கு நேர் மோதிய இந்த 6வது போட்டியின் தொடக்கத்திலும் வாங் வெற்றி பெறும் சூழலே காணப்பட்டது. முதல் செட்டில் அவர் வெற்றி பெற்றார்.

ஆனால், மணிகா பத்ரா தன்னுடைய அதிரடி விளையாட்டால் அடுத்தடுத்த செட்களை கைப்பற்றி வெற்றி பெற்றுள்ளார். இதேபோன்று கலப்பு இரட்டையர் போட்டியில், ஹர்மீத் தேசாய் மற்றும் யஷஸ்வினி கோர்பதே இணை, ஸ்பெயின் நாட்டின் ஆல்வரோ ரோபிள்ஸ் மற்றும் மரியா ஜியாவோ இணையை 3– 2 (11– 5, 5– 11, 3– 11, 117, 117) என்ற புள்ளி கணக்கில் வெற்றி பெற்று காலிறுதி போட்டிக்கு முன்னேறி உள்ளனர்.

## மாட்ரிட் ஓபன் டென்னிஸ்; சாம்பியன் பட்டம் வென்றார் ஆண்ட்ரே ரூப்லெவ்



களிமண் தரை போட்டியான மாட்ரிட் ஓபன் சர்வதேச டென்னிஸ் தொடர் ஸ்பெயினில் நடைபெற்றது. இந்த தொடரின் கடைசி நாளான நேற்று ஆண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதிப்போட்டி நடைப்பெற்றது. இந்த ஆட்டத்தில் முன்னணி வீரரான ரஷியாவின் ஆண்ட்ரே ரூப்லெவ், கனடாவின் பெலிக்ஸ் ஆகர் அலியாசிமை எதிர்கொண்டார்.

இந்த ஆட்டத்தின் முதல் செட்டை 46 என்ற புள்ளிக்கணக்கில் இழந்த ரூப்லெவ், அடுத்த இரு செட்களை 75, 75 என்ற புள்ளிக்கணக்கில் கைப்பற்றினார். இதன் மூலம் ரூப்லெவ் 46, 75, 75 என்ற புள்ளிக்கணக்கில் பெலிக்ஸ் ஆகர் அலியாசிமை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை வென்றார்.

## ஊக்கமருந்து சோதனைக்கு ஒத்துழைக்க மறுப்பு: மல்யுத்த வீரர் பஜ்ரங் புனியா சஸ்பெண்ட்



இந்திய மல்யுத்த வீரர் பஜ்ரங் புனியா. இவர் 2020ம் ஆண்டு டோக்கியோவில் நடைபெற்றஒலிம்பிக்போட்டியில்65கிலோமல்யுத்தபிரிவில்வெண்கலப்பதக்கம் வென்றார். இந்திய மல்யுத்த சம்மேள முன்னாள் தலைவர் பிரிஜ் பூஷன் மீது வீராங்கனைகள் பாலியல் புகார் அளித்தபோது வீராங்கனைகளுக்கு ஆதரவாக பஜ்ரங் புனியா குரல் கொடுத்தார். மேலும், போராட்டத்திலும் ஈடுபட்டார்.

இந்நிலையில், ஊக்க மருந்து சோதனைக்காக சிறுநீர் மாதிரியை அனுப்பும்படி பஜ்ரங் புனியாவுக்கு தேசிய ஊக்க மருந்து தடுப்பு ஆணையம் உத்தரவிட்டிருந்தது. ஆனால், பஜ்ரங் புனியா ஊக்கமருந்து சோதனைக்கு ஒத்துழைப்பு அளிக்கவில்லை. அவர் பரிசோதனைக்காக சிறுநீர் மாதிரியை அனுப்பவில்லை.

இதையடுத்து, ஊக்கமருந்து சோதனைக்கு ஒத்துழைக்க மறுத்ததால் மல்யுத்த வீரர் பஜ்ரங் புனியா சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளார். பஜ்ரங் புனியாவை சஸ்பெண்ட் செய்து ஊக்கமருந்து தடுப்பு ஆணையம் உத்தரவிட்டுள்ளது. அவர் மல்யுத்த போட்டிகளில் பங்கேற்க காலவரையற்ற தடை விதிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் பாரிசில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற உள்ள நிலையில் அதில் பஜ்ரங் புனியா பங்கேற்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

## பாரீஸ் ஒலிம்பிக் போட்டி 400 மீட்டர் தொடர் ஓட்டத்தில் இந்திய அணி தகுதி



பாரீஸ் ஒலிம்பிக்கில் 400 மீட்டர் தொடர் ஓட்டத்தில் இந்திய அணி தகுதி பெற்றுள்ளது.

ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் இந்திய அணி தகுதி பெற்று அசத்தியுள்ளது.

இதற்காக, பஹாமாஸில் நடைபெற்ற தகுதி சுற்றில் இந்திய அணி வீரர், வீராங்கனைகள் அபாரமாக விளையாடி தகுதி பெற்றுள்ளனர்.

ஒலிம்பிக் போட்டிக்கு தேர்வான மகளிர் அணியில் தமிழகத்தை சேர்ந்த சுபா வெங்கடேசனும் இடம் பெற்றுள்ளார்.

## பெண்கள் டி20 போட்டி வங்காள தேசத்தை வீழ்த்தி இந்தியா அபார வெற்றி




இந்தியபெண்கள்கிரிக்கெட்அணிவங்காளதேசத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் ஆடி வருகிறது. இந்த தொடரில் 3 போட்டிகள் முடிந்த நிலையில் 3 ஆட்டங்களிலும் இந்தியா வெற்றி பெற்று தொடரில் 30 என முன்னிலையில் இருந்தது.

இந்நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான 4 வது டி20 போட்டி நேற்று நடைபெற்றது. இதில் டாஸ் வென்ற வங்காளதேச அணி பந்து வீச்சை தேர்வு செய்தது. அதன்படி முதலில் இந்திய அணி பேட்டிங் ஆடியது. அப்போது 5.5 ஓவர்கள் நடந்து கொண்டிருந்தபோது மழை குறுக்கிட்டது. இதனால் ஆட்டம் டி.எல்.எஸ் முறையில் 14 ஓவர்களாக குறைக்கப்பட்டது. இந்திய அணி 14 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 122 ரன்கள் எடுத்தது. இந்தியா தரப்பில், அதிகபட்சமாக ஹர்மன் பிரீத் கவுர் 39 ரன்களும் ரிச்சா கோஷ் 24 ரன்களும், மந்தனா மற்றும்ஹெமலதாஆகியோர்22ரன்களும்எடுத்தனர். வங்காளதேச தரப்பில் அதிகபட்சமாக மருபா அக்தர் மற்றும் ரேபியாகான் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகள் எடுத்தனர்.

இதையடுத்து 123 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங்கிய வங்காளதேச அணி 14 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து 68 ரன்கள் மட்டுமே எடுத்தது. வங்காளதேச தரப்பில் அதிகபட்சமாக திலரா அக்தர் 21 ரன்களும் ரூப்யா கெய்டர் 13 ரன்களும் எடுத்தனர். இந்தியா தரப்பில் அதிகபட்சமாக ஆஷா சோபனா மற்றும் டைடஸ் சது ஆகியோர் தலா 2 விக்கெட்டுகள் எடுத்து அசத்தினர். இதன் மூலம் 56 ரன்கள் வித்தியாசத்தில் இந்திய அணி அபார வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் 40 என இந்திய அணி முன்னிலையில் உள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான 5வது டி20 போட்டி வரும் 9ம் தேதி நடைபெறுகிறது.



**எளிதென இல்லிறப்பான் எய்துமெஞ் ஞான்றும்**
**விளியாது நிற்கும் பழி**

**விளக்கம்:**

**இச் செயல் எளியது என எண்ணிப் பிறனுடைய மனைவியிடம் நெறிதவறிச் செல்கின்றவன், எப்போதும் அழியாமல் நிலைநிற்கும் பழியை அடைவான்.**

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.